7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011),@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், இப்போது மணி 2-04 ஆகிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

பிற்பகல் 2-05

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய நீண்ட நெடிய வரலாற்றில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற மக்கள், சமூகத்தின் அடித்தட்டில் எவ்விதமான சமூகப் பாதுகாப்பும் இல்லாமல் வாழ்கின்ற மக்கள், உழைக்கின்ற மக்களுக்காகச் சிந்தித்துப் பார்த்து, ஒவ்வொரு தரப்பினருக்கும்

@ 10-2-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வேண்டிய சமூகப் பாதுகாப்பை, அதிகாரப் பங்கீட்டை, சமூக நீதியினை வழங்குவதற்காகப் பல்வேறு சட்டங்களை அவர்கள் இயற்றி, பல்வேறு நலத் திட்டங்களையும் முன்மொழிந்து, இன்று அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததைப்போல, தமிழகத்திலே வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்ல, இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்ல, கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களையும் நான்தான் பாதுகாப்பேன் என்கின்ற உணர்வோடு (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்காக இந்த மாமன்றத்திலே நாங்கள் வைத்த கோரிக்கையை, நானும் குறிப்பாக என்னுடைய அருமை நண்பர், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த சகோதரர் திரு. வேல்முருகன் அவர்களும் வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழ்த் தொழிலாளிகளுக்கு ஒரு வாரியம் வேண்டும், ஒரு நிதியம் வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தோம். நாங்கள் ஒரு புள்ளியை வைத்தோம். ஆனால், இன்று அவர்கள் அதை ஒரு கோலமாக மாற்றித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்களுக்குச் செய்யப்படுகின்ற உதவிகளின் பட்டியலைப் பார்க்கின்றபொழுது, நான் உள்ளபடியே நன்றியால் நெகிழ்ந்து போனேன். ஏனென்று சொன்னால், வெளிநாடுகளில் வாழ்கின்ற நிறைய தொழிலாளர்கள் இருக்கின்ற ஒரு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நான் வந்திருக்கிறேன். என்னுடைய கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து ஏறக்குறைய 30,000 தொழிலாளர்கள் இன்று வளைகுடா நாடுகளிலும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

கடந்த தீபாவளித் திருநாளன்று துபாய் நகரத்திலே தமிழ்ச் சங்கத்திற்காக உரையாற்ற அழைக்கப்பட்டிருந்த வேளையிலே, நம்முடைய தொழிலாளர்கள் வாழ்கின்ற அந்த இடங்களை, அவர்கள் வாழ்கின்ற முகாம்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதுதான், தங்கள் மனைவி மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தங்கள் சொந்தங்களைப் பாதுகாப்பதற்காகவும் தங்கள் குழந்தைகளுடைய எதிர்கால வாழ்வுக்காகவும், எவ்வளவு பெரிய தியாக வாழ்வை அவர்கள் கடல்கடந்து சென்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலையைப் பார்க்கின்றபொழுது, அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்கிற உணர்வோடு மாண்புமிகு முதலமைச்சர்

2011 பிப்ரவரி 10] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அவர்களிடத்தில் சொன்னேன். அவர்கள் இன்று இந்த அற்புதமான ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, ஒரு நிதியினையும் அதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிதியினுடைய அடிப்படையிலே இனிமேல் வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் எல்லோருக்கும் எவ்வளவு அன்பு கிடைக்கப்போகிறது என்று சொன்னால், அவர்கள் எல்லோருக்கும், வெளிநாட்டில் தொழிலாளியாக உழைத்து தாயகம் திரும்புகின்றவர்களுக்கும், தொழிலாளியாக உழைக்க முடியாத பருவத்தைக் கடந்தவர்கள் எல்லோருக்கும் இனிமேல் ஓய்வூதியம் வழங்கப்படும் என்கின்ற ஒரு அற்புதமான தகவலை இன்று இந்தச் சட்டத்தின்மூலமாக உறுதி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் யாராவது இறந்துவிட்டால், இறந்தவருடைய குடும்பத்திற்கும் இனிமேல் தமிழக அரசு இந்த வாரியத்தின்மூலம் ஓய்வூதியம் வழங்கும் என்கின்ற செய்தியையும் தந்திருக்கிறார்கள். அதைப்போல, அவர்கள் உடல் ஊனமுற்றால் அதற்காக நஷ்ட ஈடு, நோயின் காரணமாக அல்லது விபத்தின் காரணமாக ஓர் உறுப்பினர் இறந்தால் அந்த நிதியினை வழங்குவதற்காக வகுத்துரைக்கப்பட்ட முயற்சிகள், பெரும் நோயினால் பாதிக்கப்பட்டால் வெளிநாட்டில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு இங்கு வந்து மருத்துவ சிகிச்சை, மகளுக்கான திருமண உதவி, அந்த உறுப்பினர்களுக்கான பேறுகால சலுகை, அவர்கள் குடியிருக்கும் வீட்டைக் கட்டுவதற்காக அல்லது நிலத்தை வாங்குவதற்காக இந்த வாரியத்தின்மூலம் கடன் உதவி என்று வெளிநாட்டில் வாழ்கின்ற, உழைக்கின்ற அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தேவை என்னவெல்லாம் இருக்கின்றதோ அதையெல்லாம் சீர்செய்து அவர்கள் வாழ்க்கையை சிறப்பான வாழ்க்கையாக மாற்றுவதற்கான அற்புதமான திட்டங்கள்.

இதிலே நான் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் சேர்க்க ஆசைப்படுகின்றேன். வெளிநாட்டில் வாழ்கின்ற அந்தத் தொழிலாளிகள் இறந்துவிடுகிறார்கள். இறந்துவிடுகின்ற தொழிலாளிகளுடைய சடலங்களை இங்கு கொண்டுவருவதிலே பெரும் சிரமம் இருக்கிறது. சில நேரங்களிலே சில நிறுவனங்கள் அந்தச் சடலங்களை இங்கே கொண்டுவருவதற்கான நிதி உதவியைச் செய்வதில்லை. இன்று நாம் செய்கின்ற உதவிகளின் பட்டியலில், வெளிநாட்டில் வாழ்கின்ற ஒரு தமிழன்

இறந்துவிட்டால், அவனுடைய சடலத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நிதி உதவியை அவர் வேலை பார்க்கின்ற நிறுவனங்கள் வழங்க முன்வரவில்லை என்று சொன்னால், அதையும் வழங்குவதற்கு இந்த வாரியம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவர்களுக்காக வருகின்ற நஷ்ட ஈட்டுத் தொகை, death money என்று ஆங்கிலத்திலே அவர்கள் சொல்கிறார்கள், சௌதி அரேபியாவிலோ அல்லது வளைகுடா நாடுகளிலோ யாராவது இறந்துவிட்டால் அவர்களுக்கு death money என்று சொல்லக்கூடிய மரணப் பணம் கொடுக்கவேண்டும். ஆனால், நிறைய நிறுவனங்கள் அதைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள். அதை வாங்குவதற்கான சட்ட உதவிகளைச் செய்வதற்கு எந்தவிதமான அமைப்பும் இல்லை. அந்தச் சட்ட உதவியைச் செய்வதற்கும் இந்த வாரியம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காலத்தால் அழியாத புகழைப் பெற்றிருக்கின்ற, கல்லுக்குள் இருக்கின்ற தேரைக்குக்கூட இறைவன் படியளக்கிறான் என்று சொல்வார்கள், அதைப்போல, வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழனைக்கூட தன் உள்ளத்தில் சிந்தித்துப் பார்த்து, அவன் வாழ்வுக்கும் பாதுகாப்புத் தந்திருக்கின்ற கலைஞர் அரசைப் பாராட்டி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

பிற்பகல் 2-10

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே சித்தேரி என்ற கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்ற கட்டடத் தொழிலாளி, துபாய் நாட்டில் வேலைக்குச் சென்று அங்கு அவர் இறந்தார். 8 மாத காலமாக அந்த உடல் அங்கே மருத்துவமனையிலே அழுகிய நிலையில் இருந்தபோது அந்தப் பிரச்சினையை இந்தச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்து பேசினேன், அப்போது நான், அந்த உடலை இங்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையும், அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையையும் அந்தக் குடும்பத்திற்கான இழப்பீடுகளையும் வழங்கவேண்டும் எனக்

2011 பிப்ரவரி 10] [திரு. தி. வேல்முருகன்]

கோரியிருந்தேன். அதற்காக வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், தங்கள் வயிற்றுப் பிழைப்பைக் காப்பாற்றிக்கொள்ள, தங்கள் குடும்பத்தை காப்பாற்றிக்கொள்ள, தங்களோடு பிறந்த தம்பி, தங்கைகளைக் காப்பாற்றுவதற்கு, தாங்கள் திருமணம் செய்வதற்கு போதிய வருமானம் இல்லாமல் கடல் கடந்து, வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு வேலைகளைச் செய்து உழைக்கின்ற அந்த உடலுழைப்புத் தொழிலாளர்கள், இதுபோன்ற நேர்வுகளில் இறக்கின்றபோது, அவர்களின் உடலை தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு ஆண்டுக்கணக்காக ஆகின்றது. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டில் வாழுகின்ற, தமிழ்நாட்டிலிருந்து சென்று மானத்தோடு தங்கள் குடும்பத்தை வாழ்விப்பதற்காக வெளிநாடு சென்று வேலை செய்கின்ற அந்தத் தமிழர்கள் இறக்க நேரிடுகின்றபோது, அவர்களுக்கு உரிய நிவாரணமும், அந்த உடலை இங்கே கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கான ஒரு நல வாரியம் அமைத்து, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்கிற அடிப்படையில் நான் இந்தக் கருத்தைப் பதிவு செய்தேன்.

அதன் அடிப்படையில் என் கருத்தைப் பதிவு செய்த சில மாதங்கள்கூட ஆகாத இந்தச் சூழலில் இதற்காக ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தும், இதற்காக ஒரு நல வாரியத்தையும் அமைத்தும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியதுபோல் ஏற்படுத்தித் தந்திருக்கின்றீர்கள். இந்தச் சட்டத்திலேகூட அவர் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், இதுகுறித்த செய்தி இன்று 'தினமலர்', 'தினத்தந்தி', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது, வேல்முருகன் சட்டசபையில் இந்தப் பிரச்சினையை எழுப்பிய பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதில் நேரடியாகத் தலையிட்டு துபாயில் இருந்த கட்டடத் தொழிலாளியின் உடல் 8 மாதத்திற்குப்பின் புவனகிரி வந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி முதலமைச்சர் நடவடிக்கை எடுத்ததன்பேரில், அந்த உடலைக் கொண்டுவந்து அடக்கம் செய்திருக்கிறார்கள். அடக்கம் செய்வதற்கு உதவி செய்வதற்காக நான் நம்முடைய அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறும் அதேநேரத்தில் அந்த தொழிலாளியினுடைய மனைவி, 2 கைக்குழந்தைகளோடு இன்றும்

[திரு. தி. வேல்முருகன்] [2011 பிப்ரவரி 10

வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார், பச்சைக் குழந்தைகளோடு தவித்துக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர், இந்த வாரியம் அமைத்த முதல் வேலையாக, முதல் தொகையாக இறந்த பாஸ்கரனுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தாவது உடனடியாக ஏதாவது ஒரு தொகையை அறிவித்து அவர் குடும்பத்தில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டு வெளிநாடுவாழ் தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றுவதற்காகக் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்திற்கு நெஞ்சார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்து வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2011), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,